புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | செப்டம்பர் 14, 2017 | புரட்சி 16 | முழக்கம் 35 | விலை: ரூ.3.00

# மதவெறிக்கு பலியானார், கவுரி 'இராவணன்'

*மதவெறி கோழைகளின் துப்பாக்கிக் குண்டுக்கு பலியான கவுரி லங்கேஷ் (இராவணன்) வீரமரணத்துக்கு திராவிடர் விடுதலைக் கழகம் – வீரவணக்கம் செலுத்துகிறது. அவரது எதிர்நீச்சல் வரலாறு குறித்த ஒரு தொகுப்பு.*

## "கோழையே உன்னிடம் தோட்டாக்கள்; என்னிடம் அழியா வார்த்தைகள்"

- பத்திரிகையாளரும் சமூகப் போராளியுமான 55 வயது கவுரி லங்கேஷ் - மதவெறியர்களால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட நாள் செப்டம்பர் 5 - இரவு 7.45க்கும் 8 மணிக்கும் இடையில். காரிலிருந்து இல்லம் திரும்பியபோது காரை நிறுத்துவதற்காக முன் கதவை திறக்க முயற்சித்தபோது மோட்டார் பைக்கில் வந்த 3 பேரில் இருவர் அவரது மார்பு, வயிறு, கழுத்தில் நேருக்கு நேராக சுட்டு வீழ்த்தி பிணமாக்கி விட்டனர்.
- கவுரியின் தந்தை லங்கேஷ் அவர்களும் ஒரு பத்திரிகையாளர், எழுத்தாளர், மதவாத சக்தி களுக்கு எதிரான முற்போக்கு சிந்தனையாளர். அவர் நடத்தி வந்த 'லங்கேஷ் பத்திரிகா' என்ற கன்னட இதழை கவுரி தொடர்ந்து நடத்தினார். 'லங்கேஷ் பத்திரிகா', 'டேபிளாாய்டு' என்ற வடிவத்தில் ('புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழ் வடிவத்தைப்போல்) வார ஏடாக வெளி வந்தது.
- லங்கேஷ் என்ற கன்னடச் சொல், திராவிட மாவீரன் இராவணனைக் குறிப்பதாகும்.
- இளமையில் மருத்துவர் படிப்பு, கவுரியின் கனவாக இருந்தது. ஆனால் புதுடில்லியில் உள்ள இந்திய தகவல் தொடர்புக் கல்விக்கான நிறுவனத்தில் படித்தார்.
- 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டில் அதன் பெங்களூர் பதிப்பில் 1980ஆம் ஆண்டு சில காலம் பணியாற்றினார். அதிலிருந்து விலகி, 'சண்டே' ஆங்கில வார ஏடு உள்ளிட்ட முன்னணி பத்திரிகையில் பணியாற்றினார். பிறகு தெலுங்கு தொலைக்காட்சி ஒன்றின் டெல்லிப் பிரிவுக்கு தலைமைப் பொறுப்பில் இருந்தார். பார்ப்பனப் பன்னாட்டு ஆதிக்கம் நிறைந்த இந்த ஊடகங்கள் அவரது கொள்கை உணர்வுக்குத் தடையாக இருந்ததால் அதிக ஊதியம் தரும் பதவிகளை உதறி எறிந்து விட்டு, தந்தை நடத்திய கன்னட பத்திரிகையை கன்னட மொழியில் நடத்தினார்.
- அரசு விளம்பரங்கள், கார்ப்பரேட் விளம்பரங்கள் ஏற்பது இல்லை என்ற கொள்கை முடிவு எடுத்தார். சமரசமின்றி துணிவோடு மதவெறி சக்திகளை தோலுரித்ததால் மதவெறி சக்திகளின் எதிர்ப்புகளை சந்தித்தார்.
- குடும்பத்துக்குள் சகோதரர் இந்திரஜித்திடம் (இவர் திரைப்படத் துறையில் பணியாற்றுகிறார்) கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் தந்தை நடத்திய பத்திரிகை உரிமையை இந்திரஜித்திடம் ஒப்படைத்து விட்டு, 2005ஆம் ஆண்டு முதல் 'கவுரி லங்கேஷ் பத்திரிகா' என்ற பெயரில் பத்திரிகையைத் தொடங்கி நடத்தினார்.
- பத்திரிகையைத் தவிர, தந்தை நடத்திய பதிப்பகத் துறை வழியாக நூல்களை வெளியிட்டு வந்தார்.
- 2016இல் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ் ஜோஷிக்கு எதிராக அவர் கடுமையான கட்டுரையை எழுதியதால் பார்ப்பனர் ஜோஷி நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார். ஹீபால்லி நீதிமன்றம், கவுரிக்கு 6 மாத சிறைத் தண்டனையும் ரூ.15,000 அபராதமும் விதித்தது. கைது செய்யப்பட்ட கவுரி, வழக்கை மேல் முறையீடு செய்து பிணையில் வெளி வந்தார். அடக்குமுறைக்கு அவர் அஞ்சவில்லை.
- மார்க்சிய லெனினிய அறிஞரும் நக்சல்பாரியுமான சாஜ்தேத் ரஞ்சன் தலைமறைவாக இருந்தபோது அவரைச் சந்தித்து, அவரது பேட்டியை தனது ஏட்டில் வெளியிட்டார். ரஞ்சன் பெங்களூருவை நோக்கி வந்தபோது போலீஸ் அவரை சுட்டுக் கொன்றது. ரஞ்சன் சடலம் வைக்கப்பட்ட இடத்துக்கு விரைந்தார் கவுரி. காவல்துறை விதித்த கெடுபிடி கட்டுப்பாடுகளை எதிர்த்து காவல் துறையுடன் போராடினார். உடல் எரியூட்டு இடம் வரை சென்று காவல்துறை உயர்



அதிகாரிகளின் மனித விரோதப் போக்கை போலி என்கவுண்டரை எதிர்த்து நேருக்கு நேர் வாதம் செய்தார்.

- ஆயுதம் தாங்கிப் போராடும் குழுக்களிடம் நேரில் விவாதித்து, அரசின் நல்லெண்ணத் தூதராக செயல்பட்டு, அவர்களை சமூகப் போராட்டக் களத்துக்குக் கொண்டு வந்தவர் கவுரி. 'கோமு சவுத்தார்தா வேதிகா' என்ற அமைப்பு, அடிப்படை மதவாத எதிர்ப்பாளர்கள், பகுத்தறிவாளர்கள், ஜாதி எதிர்ப்பாளர்களை அணி திரட்டும் மய்ய அமைப்பாக உருவெடுத்தது. மதவெறிக் கலவரங்கள் உருவாக்கக்கூடிய பகுதிகளுக்குச் சென்று மக்களிடையே மதவாதத்துக்கு எதிராக விழிப்புணர்வூட்டும் கடமையாற்றியது இந்த அமைப்பு.
- கடந்த மார்ச் மாதம் யோகேஷ் மாஸ்டர் என்ற முற்போக்கு எழுத்தாளர் எழுதிய 'துந்தி' என்ற கன்னட நாவலுக்கு இந்துத்துவ சக்திகளிட மிருந்து கடும் எதிர்ப்பு வந்தது. கவுரி ஏற்பாடு செய்த ஒரு புத்தக வெளியீட்டு விழா நிகழ்ச்சி 'தேவநாகரே' என்ற இடத்தில் நடந்தது. அவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக யோகேஷ் மாஸ்டரை அழைத்தார் கவுரி. மதவெறியர்கள் மாஸ்டர் முகத்தில் கருப்பு மையை வீசி அவமதித்தனர். இந்துத்துவவாதிகளை எதிர்த்து நின்றார் கவுரி. யோகேஷ் நாவலை உறுதியாக ஆதரித்தார். அதற்காக இந்துத்துவ சக்திகள் கவுரி மீது கடும் ஆத்திரமடைந்தன.
- "இந்து அமைப்பில் உள்ள ஜாதி அமைப்பை தொடர்ந்து எதிர்ப்பேன்; மதவாதத்துக்கு எதிராகத் தொடர்ந்து முழங்குவேன்" என்று கூறி வந்த கவுரி - குஜராத்தில் மோடி முதல்வராக இருந்தபோது நடத்திய இஸ்லாமிய இனப்படு கொலைகளை ஆதாரங்களுடன் அம்பலப் படுத்தி, 'ராணா அய்யூப்' எழுதிய 'குஜராத் கோப்புகள்' நூலை, கன்னடத்தில் மொழி பெயர்த்தவர்.
- கவுரியின் தந்தை லங்கேஷ், பார்ப்பனியத்தையும் பார்ப்பன மடங்களையும் எதிர்த்து கவிதை நாடகங்கள் வழியாக சமுதாய சீர்திருத்தக் கருத்துகளை பரப்பியவர்.
- பெங்களூருவில் பெரும்பாலான இளம் பத்திரிகையாளர்களின் நேசிப்புக்கும் ஈர்ப்புக்கும் உரியவர் கவுரி. பத்திரிகை மன்றத்தில் அவர் நுழைந்தால் திரும்பி காரில் ஏறும் வரை இளையோர் கூட்டம் அவரை சூழ்ந்து நிற்கும்.
- பசுமை வேட்டை என்ற பெயரில் நக்சலைட்டுகள் அழிக்கப்பட்டபோது அப்பாவி மலை வாழ் மக்கள் காவல்துறையால் வேட்டையாடப் பட்டனர். கெடுபிடிகளை மீறி அப்பகுதிக்குச் சென்று நக்சல்பாரிகளை பேட்டி கண்டு காவல்துறை அடக்குமுறையை அம்பலப்படுத்திய தோடு கருநாடக அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி நக்சலைட் மறுவாழ்வு திட்டத்தை உருவாக்கினார். அதற்குப் பிறகு தான் மேற்கு தொடர்ச்சி மலையில் தோட்டாக்கள் வெடிக்கும் சத்தம் ஓய்ந்தது.
- பார்ப்பன புரோகிதர்கள் சாப்பிட்டு வீசிய எச்சில் இலை மீது படுத்து 'அங்கப் பிரதட்சம்' செய்தால் நோய் நீங்கும் என்ற பார்ப்பன சடங்கு, அந்தரத்தில் முதுகில் அலகு குத்தி தொங்குவது, நிர்வாண பூஜை, நரபலி போன்ற வைதீக மூட நம்பிக்கை சடங்குகளுக்கு எதிராக மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டுவர கர்நாடக அரசிடம் வலியுறுத்தினார். (அரசு கொண்டு வந்த மசோதா எதிர்கட்சிகள் எதிர்ப்பால் முடங்கியிருக்கிறது) எந்த நேரத்திலும் முதல்வர் சித்தராமய்யாவை சந்திக்கும் உரிமையைப் பெற்றிருந்தார். பார்ப்பன எச்சில் இலை மீது உருளும் சடங்கை முதல்வர் சித்தராமய்யா தடை செய்தார். பார்ப்பனர்கள் நீதிமன்றம் போனார்கள். நீதிமன்றம் தடையை உறுதி செய்தது.
- சில மாதங்களுக்கு முன், 'தனது காரின் மீது காக்கை உட்கார்ந்ததால் ஆட்சிக்கு ஆபத்து ஏற்படும் என்று நம்பி முதலமைச்சர் காரை மாற்றிவிட்டார்' என்று ஊடகங்களில் செய்தி பரவியது. அடுத்த நாளே சித்தராமய்யா வீட்டுக்குச் சென்று "மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டு வருவதாகக் கூறும் நீங்களே இப்படி செய்யலாமா" என்றுநேரில் கேட்டார். சித்தராமய்யா அப்படி காரை மாற்றவில்லை, அது புரளி என மறுத்தார். "சித்தராமய்யா அப்படியெல்லாம் காரை மாற்றவில்லை; காரணம் அவர் எடியூரப்பா இல்லை" என்று கட்டுரை எழுதினார், கவுரி.
- தபோல்கர், கன்சாரே, கல்புர்கி சுட்டுக் கொல்லப் பட்ட போதும் சரி; கன்னட எழுத்தாளர் யு.ஆர்.அனந்தமூர்த்தி கொலை மிரட்டலுக்கு உள்ளானபோதும் 'மாதொரு பாதகன்' நாவலுக்காக ஜாதி வெறியர்கள் பெருமாள் முருகனை மன்னிப்பு கேட்க வைத்தபோதும் வெகுண்டெழுந்து குரல் கொடுத்தவர் கவுரி.
- பிறப்பால் ஒரு கன்னடராக இருந்தாலும் காவிரி உரிமைப் பிரச்சினையில் தமிழர்கள் தாக்கப்பட்ட போது கன்னட அமைப்புகளைக் கண்டித்து தொலைக்காட்சி அலைவரிசைகளில் பேசினார். நடிகர் பிரகாஷ் ராஜுக்கு எதிராக கன்னட ஊடகங்கள் கொந்தளித்தபோது பிரகாஷ் ராஜ் பக்கம் நின்றார். (கவுரி மரணமடைந்த சேதி கேட்டு விரைந்த நடிகர் பிரகாஷ்ராஜ், இறுதி ஊர்வலம் வரை உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது)
- உருவ வழிபாடு, வேத வழிபாடு எதிர்ப்பை உள்ளடக்கி, ஜாதி, மதம், பெண்ணடிமைக்கு எதிராக கருநாடகாவில் 12ஆம் நூற்றாண்டில் எழுச்சி பெற்ற ஒரே முற்போக்கு இயக்கம் பசவண்ணரின் லிங்காயத்து நெறி இந்து மதத்தை முற்றிலும் நிராகரித்ததோடு ஜாதியையும் புறந்தள்ளியது. பார்ப்பனர், தலித் உள்ளிட்ட பல்வேறு ஜாதிப் பிரிவினர் லிங்காயத்தில் இணைந்து தங்களுக்குள் ஜாதி கடந்த திருமண உறவுகளை உருவாக்கிக் கொண்டனர். பார்ப்பனியம் லிங்காயத்தையும் சீரணித்து விழுங்கியது. அண்மையில் 'லிங்காயத்துகள்' நாங்கள் இந்துக்கள் அல்ல என்று அறிவித்தனர். அதை ஆதரித்து கட்டுரைகளை எழுதினார் கவுரி லங்கேஷ்.
- இந்துத்துவ பார்ப்பனியத்துக்கு எதிராக வெடித்துக் கிளம்பிய டெல்லி 'ஜெ.என்.யூ' பல்கலைக் கழக மாணவர் கன்யாகுமார், குஜராத் உனா போராட்ட ஒருங்கிணைப்பாளர் ஜிக்னேஷ் மேவானி, ஜேய்பீம் ஆர்மி சந்திரசேகர் ஆகியோரை, தனது சொந்த மகன்களாக அங்கீகரித்தார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தை முன்னெடுக்கும் 'ஜெய் பீம்' முழக்கமே இந்தியாவை மீட்டெடுக்கும் என முழங்கிக் கொண்டே இருந்தார்.

"காந்தியைப் போல், கல்புர்கியைப்போல் என்னைக் கொன்றாலும் எனது பணியை நிறுத்த மாட்டேன்; நாளை நடக்கக் கூடியது இன்றே நடக்கட்டும்! இங்கே யாரைக் கண்டு அச்சம்?" என்ற பசவண்ணனின் வசனத்தை அடிக்கடி கூறுவார்.

"கோழையே, உன்னிடம் தோட்டாக்கள்
என்னிடம் அழியா வார்த்தைகள்
எதற்கும் அஞ்ச மாட்டேன்
நான் கவுரி லங்கேஷ்"

- இது அண்மைக்காலமாக கூட்டங்களில் கவுரி லங்கேஷ் முன் வைத்த முழக்கம்.

தமிழ்நாட்டுச் சூழலில் பெரியாரியப் போராளி என்று அடையாளப்படுத்தும் அனைத்துத் தகுதி களுக்கும் உரியவர் கவுரி லங்கேஷ்.

வர்ணாஸ்ரம மதவாதத்தை எதிர்த்த வீராங்கனை வரலாறாகி நிற்கிறார்! வீரவணக்கம்!

தலையங்கம்

## காவிரி புஷ்கரமாம்!

வேதகால பார்ப்பனச் சடங்குகள் அப்படியே தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அதற்கு அரசு நிறுவனங்களும் துணை போய் மதச்சார்பின்மை கொள்கையை குழித் தோண்டி புதைக்கின்றன. பார்ப்பன மேலாதிக்கம் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு இவை சான்றுகள்.

காவிரியில் நீர் இல்லை; காவிரி நீரை கருநாடக அரசு உச்சநீதிமன்றத் தீர்ப்புகளுக்குப் பிறகும் முறையாக தர மறுப்பதால் விவசாயம் கடும்பாதிப்புக்கு உள்ளாகி விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலை உருவாகி யிருக்கிறது. டெல்லியில் விவசாயிகள் கடன்களை தள்ளுபடி செய்யப் கோரி தொடர்ந்து போராடி வருகிறார்கள். காவிரி நீர் தமிழ்நாட்டுக்கு வளம் சேர்க்கும் நதி; விவசாயத்துக்கு ஆதாரமானது என்பதால் தமிழர்கள் காவிரியைப் போற்றுகிறார்கள். தமிழ் இலக்கியங்கள் பெருமை பேசுகின்றன. ஆனால் பார்ப்பனர்களுக்கு அது பற்றி எல்லாம் கவலை இல்லை. காவிரி வற்றினாலும் விவசாயிகள் மாண்டாலும் ‘காவிரி புஷ்கரம்’ நடத்தவே துடிக்கிறார்கள்.

அது என்ன ‘காவிரி புஷ்கரம்’? 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை வருகிறதாம் ‘காவிரி புஷ்கரம்’. குருபகவான் ஒவ்வொரு ஆண்டும் ஒரு இராசியிலிருந்து மற்றொரு ‘இராசி’க்கு இடம் பெயர்கிறானாம். ஒவ்வொரு நதிக்கும் ஒரு ‘இராசி’ உண்டாம். இந்த ஆண்டு ‘குரு’ பகவான் கன்னிராசியிலிருந்து ‘துலாம்’ ராசிக்கு இடம் பெயர்கிறானாம். காவிரி துலாம் இராசியாம். இது 144 ஆண்டுக்கு ஒரு முறை வருமாம். நாகை மாவட்டம் மயிலாடுதுறையில் காவிரி ஓடும் ‘துலாக் கட்டம்’ பகுதிதான். இதற்கான புண்ணியமான பகுதியாம். ‘புஷ்கரத்தில்’ காவிரியில் நீராடினால் கங்கையில் நீராடுவதற்கு சமமான ‘புண்ணியம்’ கிடைக்குமாம். இப்படி எல்லாம் கூறுவது காஞ்சி ஜெயேந்திர சங்கராச்சாரி.

காஞ்சி மடத்தில் சீனியர் சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதியிடம் ‘சண்டை’ போட்டுக் கொண்டு சங்கராச்சாரியிடம் கட்டாயம் இருக்க வேண்டிய ‘தண்டத்தை’ மடத்திலேயே விட்டுவிட்டு இரவோடு இரவாக 1987ஆம் ஆண்டு ஆகஸ்டு 25ஆம் தேதி காணாமல் போனார் ஜெயேந்திரன். கடைசியில் அவர் கருநாடக மாநிலம் ‘தலைக்காவிரி’யில் இருந்தார் என்பதை காவல் துறை கண்டுபிடித்தது. அதைத் தொடர்ந்து காஞ்சி மடத்துக்கும் ஜெயேந்திரனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று “மகாபெரியவாள்” சந்திரசேகர் அறிவித்தார்.

1983ஆம் ஆண்டு மே 27ஆம் தேதி காஞ்சி மடத்தில் 13 வயதே நிரம்பிய விஜயேந்திரனை தனது வாரிசாக உரிய வேத சடங்குகளுடன் நியமித்து அறநிலையத் துறைக்கும் அறிவித்து விட்டார்., அதற்குப் பிறகு அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த ஆர்.வெங்கட்ராமன் போன்ற மேலிட பார்ப்பனர்கள் தலையிட்டு சமாதானம் பேசி மீண்டும் ஜெயேந்திர சரசுவதியை மடத்துக்குள் கொண்டு வந்து சேர்த்தார்கள். தலைக் காவிரியில் அன்று தலைமறைவாகி யிருந்த அதே ஜெயேந்திரன்தான் இப்போது ‘காவிரி புஷ்கரம்’ நடத்த தனது தலைமையில் குழு அமைத்திருக்கிறார்.

செப்டம்பர் 12 முதல் 24 வரை தண்ணீர் இன்றி வறண்டு கிடக்கும் காவிரியில் 13 நாள்கள் ‘புஷ்கரம்’ நடத்துகிறார்களாம். ஸ்டேட் வங்கி உள்ளிட்ட பொதுத் துறை நிறுவனங்கள் இதற்கு நிதி உதவி செய்வதோடு விழாக் குழுவிலும் அதிகாரிகள் பங்கேற்று செயல்படுகிறார்கள். சங்கராச்சாரியின் ‘புஷ்கரம்’ குழுவில் மயிலாடுதுறையில் தி.மு.க.வின் முன்னணி பிரமுகர் ஒருவரும் இடம் பெற்று தீவிரமாக செயல்பட்டு வருகிறார் என்பதையும் வெட்கத்துடன் சுட்டிக்காட்ட வேண்டியிருக் கிறது. முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும் ‘புஷ்கரத்தில்’ பங்கேற்று ‘புண்ணியம்’ தேடப் போகிறாராம்.

‘துலாம் இராசிக்கு’ சொந்தமான காவிரி ஏன் தண்ணீர் இராசியில்லாமல் வறண்டு போய் கிடக்கிறது? 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை புஷ்கரம் வருகிறது என்று எதனடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது?

கருநாடகத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து சேர வேண்டிய காவிரியை தடுத்து நிறுத்திய ‘இராசி’ எது? காவிரியின் ‘துலாம்’ இராசிக்கு சனி பகவான் குடிபெயர்ந்த பிறகாவது தமிழ்நாட்டுக்கு காவிரியில் தண்ணீர் வந்து சேருமா? நதிகளுக்கு உள்ள ‘இராசி’கள் கடலுக்கும் உண்டா? இப்படி பல கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம். எந்தக் கேள்விக்கும் அறிவியல் ரீதியான பதில் கிடைக்காது.

சைவ மடாதிபதியான திருப்பனந்தாள் ஆதீனம், ‘புஷ்காரத்துக்கு’ வரலாற்றுச் சான்றுகள் ஏதும் கிடையாது என்று கூறியிருக்கிறார். துணிவுடன் வெளி வந்திருக்கும் ஆதீனத்தைப் பாராட்டுகிறோம்.

‘காவிரி’யை வேதத்துக்குள் அடக்கி அதற்கும் மதச் சாயம்பூசும் கேலிக் கூத்துகள், மதச் சார்பற்ற ஒரு நாட்டில் அரங்கேறிக் கொண்டிருப்பதும், அதற்கு அரசு எந்திரங்கள் நிதி உதவிசெய்வதும் வெட்கித் தலைகுனிய வேண்டிய நிகழ்வுகள்.

காவிரி நீர்உரிமைப் போராட்டத்தைப் பற்றிக் கவலைப்படாத சங்கர மடம், காவிரி புஷ்கரம் கொண்டாடி, பல கோடி ரூபாயை பாழடிப்பது விவசாயிகளை அவமதிப்பதாகும்.

வேதகாலப் பார்ப்பனிய திமிரை அப்படியே காப்பாற்றுவதே அதன் நோக்கம்.

‘பார்ப்பன ஆதிக்கம் எல்லாம் பழைய கதை’ என்று பேசுவோர், இந்த ‘புஷ்கரம்’ கூத்துகளை திரும்பிப் பார்க்கட்டும்.

# விழுப்புரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்




சமூக நீதிக்கு எதிரான நீட் தேர்வை கண்டித்தும் மாணவி அனிதாவின் மரணத்துக்கு நீதி கேட்டும் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வட்டம் மூங்கில்துறைப் பட்டு கிராமத்தில் 04.09.2017 அன்று கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. சி.சாமிதுரை தலைமை வகித்தார். க. மதியழகன் தொடக்க உரையாற்றினார். வேதகாலக் கல்வி தொடங்கி ஆங்கிலேயர் ஆட்சி கல்வி, நீதிக்கட்சி காலக் கல்வி, இராசாசியின் குலக் கல்வி, காமராசர் ஆட்சி கல்வி, மோடியின் இந்தி திணிப்பு - நீட் தேர்வு பற்றி உரையாற்றினார்.

அழகு முருகன், இராஜேஷ், இளையரசன், தீனா, பெரியார் வெங்கட் ஆகியோர் நீட் தேர்வினால் ஏழை எளிய பிள்ளைகள் பாதிக் கப்படுவதைப் பேசினார்கள். இறுதியாக க. இராமர் கண்டன உரையாற்றினார். உரையில் நீட் தேர்வு, இந்தி திணிப்பு, தமிழக கல்வியின் சிறப்பு மருத்துவ சிறப்பு, வெளி மாநிலத்தில் மருத்துவ வசதி இல்லாமல் மக்கள் படுகின்ற துன்பங்கள் பற்றி விரிவாகப் பேசினார்.

கண்டன ஆர்பாட்டத்தில் விழுப்புரம் மாவட்ட கழகத் தோழர்கள், அம்பேத்கர் அமைப்பு மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் கலந்து கொண்டு தங்கள் கண்டனத்தையும் ஆதரவையும் தெரிவித்தனர்.

# ஈரோடு வடக்கு மாவட்டக் கலந்துரையாடல்




ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பாக பெரியார் பிறந்தநாள் விழா தொடர்பாக கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட அலுவலகத்தில் 10.09.2017 ஞாயிறு மாலை 4 மணிக்கு நடைபெற்றது. மாநில வெளியீட்டு செயலாளர் இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் செப். 17 அய்யா பிறந்தநாள் விழாவை மாவட்ட கழகத்தால் சிறப்பாக சத்தியமங்கலத்தில் துவங்கி மாவட்ட முழுவதற்கும் அனைத்து பகுதியில் கழக கொடியினை ஏற்றுவது; கோபி நகர,ஒன்றிய கழகத்தின் சார்பாக 24.09.2017 அன்று கொடியேற்று விழா நடத்துவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் பெரியார் பிறந்தநாள் விழா செலவிற்காக மாவட்ட அமைப்பாளர் நிவாஸ் மகன் பெரியார் பிஞ்சு அறிவுக்கனல் தனது உண்டியல் சேமிப்பு தொகையாக ரூ.750/-ஐ மாவட்ட செயலாளர் வேணுகோபாலிடம் வழங்கினார்.

# ‘நிமிர்வு’ இதழ் குறித்து திருப்பூரில் வாசகர் வட்டம் ஆய்வு

திருப்பூர் மாநகர செயலாளர் சி. மாதவன் சகோதரர் சி.நாகராசு - ம. அசுவிதா, வாழ்க்கை துணை ஒப்பந்த விழா முடிந்தவுடன் நண்பகல் 3:00 மணிக்கு நிமிர்வோம் வாசகர் வட்டம் தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநில அமைப்பாளர் சிவகாமி தலைமையில் 2ஆவது கூட்டம் நடைபெற்றது நிகழ்ச்சியில் 15 தோழர்கள் பங்கு பெற்றார்கள். வாசகர் வட்ட நோக்கத்தினை எடுத்துக் கூறி இனி கழக நிகழ்வுகளில் எங்கெங்கு வாய்ப்பு கிடைக்கிறதோ அங்கெல்லாம் தோழர்கள் 1 மணிநேரம் வாசிப்பு வட்டத்தை நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

நிகழ்வில் ஆகஸ்ட் மாத நிமிர்வோம் இதழில் வெளிவந்த “வந்தே மாதரம்” பாடல் குறித்த தலையங்கம் படித்துக் காண்பிக்கப்பட்டு விரிவாக விவாதிக்கப்பட்டது. மேலும் இதழின் ஒவ்வொரு கட்டுரையும் அதன் ஆசிரியர் பற்றிய தகவலோடு அனைவரும் தத்தமது கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். 16.9.2017 அன்று மாலை பொள்ளாச்சியில் வாசகர் வட்ட சந்திப்பு நடத்துவதென்றும் தோழர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் படிக்கும் நூல்களைப் பற்றி முன்கூட்டியே பதிவிட்டு அது குறித்து விவாதிக்கவும் ஒருமனதாக முடிவெடுத்தனர்

# அசுவிதா – நாகராசு மண விழா !



கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் அசுவிதா - நாகராசு ஜாதி மறுப்பு இணையர் வாழ்க்கை ஒப்பந்த விழா 10.09.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் திருப்பூர் ஸ்ரீஸ்டி மஹால், (சிக்கண்ணா கல்லூரி பின்புறம்) கல்லூரி சாலையில் நடைபெற்றது. நிகழ்வில் கழக பொருளாளர் துரைசாமி, தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி, திருப்பூர் மாவட்ட தலைவர் முகில்ராசு வாழ்த்துரை வழங்கினர்.

## பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரை

# புத்தரும் பெரியாரும் ஒன்றுபடும் புள்ளிகள்

***புத்தர் விழா கொண்டாடி, அதில் விநாயகன் சிலைகளை பெரியார் உடைக்கச் சொன்னார் என்ற வரலாற்றை விடுதலை இராசேந்திரன், கைத்தடி கண்டன ஊர்வலத்தில் கைதான கழகத்தினிடம் சுட்டிக் காட்டினார். (சென்ற இதழ் தொடர்ச்சி)***

புத்தரின் சாக்கிய குலத்துக்கும் மற்றொரு குலமான கோலியர் என்ற குலத்துக்கும் இடையே எல்லையாக ரோகினி என்ற ஆறு இருந்தது. இந்த ஆற்றின் நீரைப் பயன்படுத்தும் முதல் உரிமை யாருக்கு என்பதில் இரண்டு இனக் குழுக்களுக்கிடையே சண்டை சாக்கியர்கள் ஒன்று கூடி கோலியர்கள் மீது தாக்குதல் நடத்த முடிவு எடுத்த போது - சித்தார்த்த புத்தர் போர் கூடாது என்று தனது சாக்கிய குலம் எடுத்த முடிவையே எதிர்க்கிறார். சாக்கியர் சங்கம் புத்தரை புறந்தள்ளுகிறது. புத்தரும் கபிலவஸ்துவை விட்டு வெளியேறினார். ஆனால், இந்த மேலோட்டமான நிகழ்வுகளையும் கடந்து நிற்கிறது புத்தரின் துறவு. இனக் குழுக்கள் தங்களுக்குள் சண்டையிட்டு அழிவதற்கும் இந்த அழிவுகளுக்கு அரசுகளின் ஆதரவும் அடக்குமுறைகளும் காரணமாக இருந்ததை உணர்ந்த புத்தர், வேதகால சமூகக் கட்டமைப்பை உறுதிப்படுத்திக் கொண்டிருந்த 'வர்ணாஸ்ரமத்தை' ஒழித்து மக்களுக்குள் சமநீதி உருவாக வேண்டிய தேவையை உணர்ந்ததால் உருவானதே பவுத்தம் என்பதே பல ஆய்வாளர்கள் கருத்தாக இருக்கிறது. "ஜாதியக் கொடுமைகளையும் புரோகிதர்களின் ஏமாற்று மோசடிகளையும், சடங்குகளையும் ஒழிக்க வந்ததுதான் பவுத்தம்" என்று நேரு தனது மகள் இந்திராவுக்கு சிறையிலிருந்து எழுதிய கடிதத்தில் கூறுகிறார்.

பார்ப்பனிய வேதகால கட்டமைப்பை பவுத்தம் தகர்த்தது என்பதற்கு சான்றாக பவுத்த சங்கம் 'சூத்திரர்' களை பெண்களை பிட்சுகளாக ஏற்றதைக் குறிப்பிடலாம். "பிறப்பினால் ஒருவன் சண்டாளன் ஆவதும் இல்லை; பிறப்பினால் ஒருவன் பிராமணன் ஆவதுமில்லை" என்றார் புத்தர். "பிராமணனே பிறப்பில் உயர்ந்தவன்; ஏனையோர் தாழ்வானவர்கள்" என்று அஸ்ஸலாயனா என்ற பார்ப்பனர் புத்தரிடம் சொன்னபோது, புத்தர் அந்தப் பார்ப்பனருக்கு தந்த பதில் மிகவும் ஆபத்தானது.

"அண்டை நாடுகளில் எஜமானன், அடிமை என்ற இரு பிரிவினர்தான் இருக்கிறார்கள். அடிமைகூட எஜமானாக மாற முடியும். ஆனால் உங்கள் வர்ணாஸ்ரம அமைப்பு - ஏன் மாற்றங்களுக்கு இடம் தருவது இல்லை? உலகத்தில் எங்கும் இல்லாத ஒரு சமூக அமைப்பை வைத்திருக்கிறதே!" என்று கேட்ட புத்தர் தொடர்ந்து பேசுகிறார்.

"யாகத்துக்காக நீங்கள் நெருப்பைமூட்டி அதில் யாகத்துக்காகவே பொருள்களைக்கொட்டி ஜாதியை சுத்தம்செய்துவிடலாம். தீங்குகளை ஒழித்து விடலாம் என்று கூறுகிறீர்கள். ஒருவனை ஜாதியிலிருந்தும் தீங்கிலிருந்தும் விடுவிக்கும் சக்தி நீங்கள் வளர்க்கும் யாக நெருப்புக்கு உள்ளே இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள். அது அந்த யாக நெருப்புக்கு வெளியே இருக்கிறது. அந்த நெருப்பு மக்களின் சிந்தனைகளில் மூட்ட வேண்டிய நெருப்பு. நான் அந்த நெருப்பைத்தான் மூட்டுகிறேன்; நீங்கள் மூட்டிய யாக நெருப்பு அணைந்துவிடும்; நான் மக்களின் சிந்தனையில் மீட்டும் நெருப்பு அணையாது" என்று பதிலடி தந்தார் புத்தர்.

"உடலுக்குள் ஆன்மா இருக்கிறதா? உடலும், ஆன்மாவும் வெவ்வேறானதா என்று கேட்ட சீடர்களிடம் அந்த அனுமான ஆராய்ச்சிகளில் நான் ஈடுபடுவது இல்லை. காரணம் இதனால் மனித இனத்துக்கு எந்த நன்மையும் கிடையாது" என்பதே புத்தரின் பதிலாக இருந்தது.

தனது சீடர்களிடம் புத்தர் கூறுகிறார், "பிட்சுக்களே; உடல் - ஒரு பொருள் தான்; அதற்குள் 'ஆத்மா' இருக்கிறது என்றால், அந்த 'ஆத்மா' நோய் உள்ளிட்ட இன்னல்களை உடலுக்கு தந்திருக்குமா? உடலுக்குள் ஆத்மா இல்லை என்கிறார். இதுவே புத்தரின் 'அனாத்மா' (ஆத்மா அற்றது) கோட்பாட்டின் கருத்து. 'கந்த சம்யுத்தம்', 'மகாவக்கம்' ஆகிய நூல்களில் புத்தரின் இந்த கருத்துகள் பதிவாகியிருப்பதை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். பெரியார் கடவுள் மறுப்போடு, "ஆன்மா, மோட்சம், நரகம், பிதிர்லோகம்" மறுப்பையும் புத்தரைப் போலவே முன் வைத்தார்.

"உலகம் நிலையானதா? நிலையில்லாததா? என்ற கேள்விக்கு விளக்கம் வேண்டும் என்றும், அப்போது தான் பவுத்தத்தில் இணைவேன்" என்று புத்தரிடம் கேட்டிருக்கிறார். ஒருவர் அவரது பெயர் மாலுங்கிய புத்தர். அதற்கு புத்தர் அளித்த பதில் மிகவும் ஆழமானது. புத்தர் ஒரு கதையை கூறுகிறார். "ஒருவர் மீது நச்சு கலந்த அம்பு பாய்ந்து விடுகிறது. உடனே மருத்துவரிடம் சிகிச்சைக்கு அழைத்துப் போகிறார்கள். அப்போது, அந்த நோயாளி மருத்துவரிடம், "மருத்துவரே, என் மீது இந்த அம்பை வீசியவன் பிராமணனா? க்ஷத்திரியனா? வைசியனா? சூத்திரனா? கருப்பனா? சிவப்பனா? அந்த வில் எத்தகையது? வில்லின் நாண் எந்தப் பொருளால் ஆகியது? இவற்றுக்கெல்லாம் விளக்கம் வேண்டும். இல்லாவிட்டால் நான் சிகிச்சைக்கு ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று கூறுவானேயானால், அவன் இந்த வினாக்களுக்கு விடை தெரிந்து கொள்வதற்கு முன்பே செத்துப்போய் விடுவான். அதுபோலவே உலகம்நிலையானதா? நிலையற்றதா என்பதைப் புரிந்து தெளிவு பெற்ற பிறகே புத்த மார்க்கத்துக்கு வருவேன் என்றால், விளக்கம் - விடை கிடைப்பதற்கு முன்பே மரணம் வந்து விடும். உலகம் நிலையற்றது என்று மோட்சம் போக நம்புகிறவர்களுக்கும், மூப்பு, நோய், இறப்பு உண்டு. உலகம் தான் நிலையானது என்று நம்புகிறவர்களுக்கும் இதே பிரச்னைகள் உண்டு. எனவே இந்தப் பிரச்னைக்குள் நுழைந்து நான் அலசி ஆராய்ச்சி செய்வதெல்லாம் கிடையாது" என்று பதில் கூறினார் புத்தர்.

> **பார்க்காத கடவுளையே பார்ப்பனர்கள் எப்படி கடவுளை அடைய வழி காட்ட முடியும் என கேட்டார் புத்தர்**

"மனிதர்களை கடவுள் படைத்தாரா?" என்ற கேள்விக்கும் புத்தரின் பதில் இதுபோலவே இருந்தது. "மனிதன் அனுபவிக்கும் இன்பம், துன்பம், கடவுள் படைத்தது என்றால், அந்தக் கடவுள் இந்த துயரங்களையும் மனிதர்களோடு சேர்த்து படைத்தாரா? கொலையாளிகளையும், திருடர்களையும் கடவுள் தான் படைத்தாரா என்ற கேள்வியை எழுப்பிய புத்தர், இப்படித்தான் கடவுள் படைப்பு என்றால் ஒரு மனிதனுக்கு நற்செய்கையில் எப்படி ஊக்கமும் உற்சாகமும் கிடைக்கும்" என்ற அறிவார்ந்த கேள்வியை எழுப்பினார்.

வேதங்கள் கடவுளை 'பிரம்மம்' என்று கூறுகிறது. அந்தக் கடவுளை அடைவதற்கு தங்களுடைய 'வேதம்' வழிகாட்டுவதாக 'பிராமணர்கள்' கூறினார்கள். வாசேத்தர் என்ற இளம் பார்ப்பனர் ஒருவர் இது குறித்து புத்தரிடம் நடத்திய உரையாடல் 'தீவிக்க சுத்தம்' என்ற பவுத்த நூலில் இடம் பெற்றுள்ளது. வெவ்வேறு பாதைகளை 'பிரம்மத்தை' அடைவதற்கு பார்ப்பனர்கள் வழி காட்டுகிறார்கள் என்பது உண்மையா என்று வாசேத்தர் கேட்ட கேள்விக்கு புத்தர் சில எதிர் கேள்விகளை முன் வைத்தார். வேதங்களில் சொல்லப்படும் 'பிரம்மத்தை' கடவுளை - எந்த ஒரு 'பிராமணராவது' நேரில் பார்த்திருக்கிறாரா? அல்லது இந்த 'பிராமணர்களின்' குருநாதர்கள் பார்த்திருக்கிறார்களா? இந்த குருநாதர்களில் யாரேனும் ஒரு மாணவராவது பார்த்திருக்கிறாரா? புத்தரின் இந்தக் கேள்விகளுக்கு அப்படி பார்த்ததாக எந்த 'பிராமணரும்' கூறவில்லை என்று வாசேத்தரிட மிருந்து பதில் வருகிறது. "தாங்களே அறியாததை பார்க்காததை பிறருக்கு - அதை அடைவதற்கான பாதை காட்டுவதாகக் கூறுவது முட்டாள்தனம் அல்லவா" என்றுகேட்கிறார் புத்தர்.

"வேத பார்ப்பனியம் ஒதுக்கி இழிவு செய்த சூத்திரர்களை பிட்சுகளாக அங்கீகரித்தது புத்த மார்க்கம். வேதத்தை சூத்திரன் படிக்க தடை போட்டது பார்ப்பனியம். ஆனால் முடிதிருத்தும் நாவிதர் சமூகத்தில் பிறந்த உபாலி பவுத்த சங்கத்தில் புத்தருக்கு அடுத்த இடத்தில் உயர்த்தப்பட்டதோடு பவுத்த நூலான திரிபிடகத்தைப் படித்து மற்றவர்களுக்கு விளக்கக் கூடிய உரிமையையும் பவுத்த சங்கம் வழங்கியிருந்தது" என்ற தகவலை அம்பேத்கர் எடுத்துக் காட்டுகிறார். பெண்களை இயக்கத்தில் சேர்க்க முதலில் தயங்கினார் புத்தர். பவுத்தத்தின்நெறி பிறழ்ந்து விடுமோ என்ற அச்சம் இருந்தது. பிறகு நிபந்தனைகளோடு இணைத்துக் கொண்டார். அன்றைய சமூக நிலையோடு பொருத்தி புத்தர் முன்னெடுத்த செயல்பாடாக இதைப் பார்க்க வேண்டும். வீதிகளை சுத்தப்படுத்தும் வேலைசெய்து வந்த சுனிதாவை சங்கத்தில் சேர்த்து துறவியாக்கினார் என்ற தகவலும், அந்தப்பெண் பல பாடல்களை இயற்றக்கூடிய ஆற்றல் பெற்றார் என்பதையும், 'தேரிகதா' என்ற பவுத்த நூல் விவரிப்பதை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். "புத்தர் ஒரு நாத்திகராக இருந்தாலும் அவரைப்போல் மக்களால் கடவுளாக மதிக்கப்பட்டவர்கள் வேறு எங்கும் பார்க்க முடியாது" என்று கூறுகிறார் அம்பேத்கர். "தன்னிடம் தெய்வீகத் தன்மை இருக்கிறது என்று பெருமைப்படும் ஆணவமற்ற எளிய மனிதர்" என்று படம் பிடிக்கிறார் அம்பேத்கர்.

பெரியாரும் இப்படித்தான் வாழ்ந்தார். "என்னை மகாத்மாவாக்கி விடாதீர்கள்" என்று கேட்டுக் கொண்டார், பெரியார். "அப்படி மதிக்கப்படாமல் எனது வார்த்தைகள், அபிப்பிராயங்கள் அதற்குண்டான சரியான மதிப்புப் பெற வேண்டுமானால், நான் அயோக்கியனாகவும் மாறாக பணம் சம்பாதிப்பவனாகவும் திருடனாகவும் கருதும் படியாக பிரச்சாரம் செய்பவர்கள் உதவி செய்தவர்களே ஆவார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் மனிதத் தன்மைக்கு மீறிய எந்த குணத்தையும் என் மீது சுமத்தி விடாதீர்கள்" என்று சொன்னவர், பெரியார்.

பெரியாரும் புத்தரும் இங்கே ஒரே புள்ளியில் இணைவதைப் பார்க்கிறோம்.

புத்தரும் புத்தரின் சீடர்களும் நாடு முழுதும் சுற்றி மக்களை சந்தித்தார்கள்; விவாதித்தார்கள்; உரையாடினார்கள். பெரியாரும் பெரியார் இயக்கமும் அதைத்தான் செய்தது. பெரியார் சுற்றுப்பயணம் செய்யாத நாட்களே இல்லை. ஒவ்வொரு நாளும் மக்களை சந்தித்துப் பேசுவதே பெரியாருக்கு உற்சாகத்தையும் உடல்நலப் பாதுகாப்பையும் தந்தது.

புத்தர் 29 வயதில் வீட்டைவிட்டு வெளியேறி 7 ஆண்டுகள் மக்கள் வாழ்வியலில் சந்திக்கும் பிரச்னைகள் அனுபவங்களின் வழியாக உணர்ந்தார். அதே அனுபவங்கள் இளமைக் காலம் முதல் பெரியாருக்கும் இருந்தது. தந்தையின் கடையில் சிறுவனாக வியாபாரத்திற்கு உதவியபோதும் வீட்டைவிட்டு வெளியேறி வடமாநிலங்களில் துறவியாக சுற்றித்திரிந்த போதும், கொள்கைக்காக கதர் மூட்டைகளை சுமந்து சென்று மக்களிடம் விற்பனை செய்தபோதும், காங்கிரஸ் கட்சியின் பொறுப்புகளை ஏற்று கடமையாற்றிய போதும் அவருக்குக் கிடைத்த அனுபவங்கள் அதன் வழியாக உருவாகிய எண்ண ஓட்டங்கள், சுயமரியாதை என்ற 'தம்மம்' நோக்கி பெரியாரை உந்தித் தள்ளியது.

37ஆவது வயதில் தனது பயணத்தைத் தொடங்கிய புத்தர், 43 ஆண்டுகள் பார்ப்பனியத்துக்கு எதிராக மக்களை அணி திரட்டி, 80ஆவது வயதில் முடிவெய்தினார். புத்தரின் பேச்சுகளும் உரைகளும், விவாதங்களும் அவரது காலத்தில் தொகுக்கப்படவில்லை. புத்தர் மறைந்து சுமார் 400 ஆண்டுகளுக்குப் பிறகுதான் 'திரிபிடகம்' என்ற பெயரில் நூல்களாக எழுதப்பட்டன. ஆனால் பெரியார் வாழ்நாள் முழுதும் ஆற்றிய உரைகள், எழுத்துகள், அவர் நடத்திய 'குடிஅரசு', 'புரட்சி' பகுத்தறிவு இதழ்கள் வழியாக அச்சு வடிவம் பெற்றிருந்தாலும், அவைகள் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படாமல் பெரியார் உருவாக்கிய நிறுவனம், இயக்கத்தோடு முடங்கிக் கிடந்த நிலையில் தான், நாம் 'குடிஅரசு' தொகுப்புகளை தேடிப் பிடித்து தொகுத்து வெளியிட முன் வந்தோம். இதற்காக சட்டப் போராட்டங்களை நாம் சந்திக்க வேண்டியிருந்தது. பெரியார் கருத்துகளை முடக்கிவிட கூடாது என்று நீதிமன்றத்தின் வழியாக நாம் போராடி பெற்ற உரிமைதான், இன்று பல்வேறு பதிப்பகங்கள் வழியாக தொகுதி தொகுதியாக வெளி வந்து கொண்டிருக்கின்றன. சமூக மன்றத்துக்காக களமிறங்கி நிற்கும் இளைஞர்களிடமும் ஜாதி ஒழிப்புப் பெண்ணுரிமைக் களங்களில் பயணிக்கும் தோழர்களிடமும் பெரியாரின் சிந்தனைகள் அறிவாயுதமாக பயன்படுகிறது என்றால், அதற்கு வழி திறந்து விட்டவர்கள் நாம் என்பதில் நிச்சயமாக நாம் பெருமை அடைய முடியும்.

(அடுத்த இதழில் முடியும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘நீட்’ தேர்வில் பதுங்கியுள்ள சர்வதேச அரசியல்: கல்வியாளர் அம்பலப்படுத்துகிறார்

*மருத்துவ சேவையைக் குலைத்து பன்னாட்டு நிறுவனங்களுக்கு கதவு திறந்து விடும் சர்வதேச அரசியல் ‘நீட்’ தேர்வு முறையில் பின்னணியாக செயல்படுகிறது என்கிறார் கல்வியாளர் அனில் சடகோபால். அவரது பேட்டி:*

இது ஏறத்தாழ **60** ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம். ஒல்லியான தேகம் கொண்ட அந்த இளைஞர் பிரபலமான ஒரு கல்லூரியில் சேர்வதற்கான நேர்காணலுக்குச் செல்கிறார். நேர்காணல் தொடங்கிய ஒரு சில நிமிடங்களிலேயே அவருக்கு அந்தக் கல்லூரியில் சேர்வதற்கான வாய்ப்பு மறுக்கப்படுகிறது. அதற்குக் கூறப்பட்ட காரணம், “நீங்கள் இந்தி வழியில் கற்றவர்” என்பதுதான். அந்த இளைஞர் பதற்றப்படாமல் சொல்கிறார், “ஓ, அப்படியா... சரி நீங்கள் எனக்கு வாய்ப்பு மறுக்கும் காரணத்தை ஒரு துண்டுச் சீட்டில் எழுதித் தாருங்கள். அந்தச் சீட்டை எடுத்துக்கொண்டு நான் ராஷ்டிரபதி பவனுக்குச்செல்கிறேன். நான் இந்தியில் படித்ததால் எனக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது என்று கூறுகிறேன். பன்மைத்துவமான ஒரு தேசத்தில் ஒருவனுக்குத் தன் தாய்மொழியில் படிக்க உரிமையில்லையா ? என்று குடியரசு தலைவரிடம் கேட்கிறேன்” என்கிறார். தேர்வுக்குழு வாயடைத்துப் போகிறது. அவரது கேள்வியில் உள்ள நியாயம் புரிந்து இப்போது அந்த மாணவனைக் கல்லூரியில் சேர்த்துக் கொள்கிறது. அந்த மாணவர் இந்தியாவின் முக்கியமான கல்வி செயற்பாட்டாளரான பேராசிரியர் அனில் சடகோபால்.

தற்போது அனில் சடகோபால் இந்தியா முழுவதும் பயணித்து நீட் தேர்வுக்கு எதிராகத் தீவிரமாக பிரச்சாரம் செய்து வருகிறார். சென்னைக்கு நீட் தேர்வு சம்பந்தமாக பொதுப் பள்ளிக்கான மாநில மேடை ஒருங்கிணைத்த ஒரு கூட்டத்துக்கு வந்த போது அவர் அளித்த பேட்டி:

*ஒரு கல்வியாளராக இருந்து கொண்டு ஏன் நீட் தேர்வை எதிர்க்கிறீர்கள்... நம் கல்வித் துறை மேம்பட வேண்டும் என்று உங்களுக்கு விருப்பம் இல்லையா?*

நான் கல்வியாளர், பேராசிரியர் என்பதனால்தான் நீட் தேர்வை எதிர்க்கிறேன். நீட் தேர்வினால் கல்வித்தரம் மேம்படும் என்பது மக்களை ஏமாற்றும் வேலை. சொல்லப் போனால், நீட் தேர்வு இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கே எதிரானது.

*எப்படிச் சொல்கிறீர்கள்?*

அரசியலமைப்புச் சட்டத்தின் ஒவ்வொரு பத்தியும் சமூகநீதியையும், சமத்துவத்தையும் பரிந்துரைக்கிறது. ஆனால், இந்த நீட் தேர்வு, அதற்கு நேரெதிராக இருக்கிறது. இந்தியா என்பது ஒற்றைத் தேசம் கிடையாது. அது, பல்வேறு தேசிய இனங்கள் வாழும் மாநிலங்களின் தொகுப்பு. பல்வேறு தேசிய இனங்களின் மாணவர்களின் திறனை ஆராய ஒற்றைத் தேர்வு என்பது சுத்த அயோக்கியத்தனம். எப்படி எதுவும் இதுவரை சேராமல் இருக்கும் வடகிழக்கு மாணவனும், எல்லா வாய்ப்பு வசதிகளையும் பெற்ற டெல்லி மாணவனும் போட்டி போடுவான் ? இருவருக்கும் ஒரே தேர்வு என்பது மக்களை மடையர்கள் ஆக்கும் வேலை இல்லையா ? அது மட்டுமல்ல, புதிய கல்விக் கொள்கையை மக்கள் மன்றத்தில் வைக்காமல், அதில் உள்ள பிரிவுகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றும் வேலையைத்தான் இந்திய அரசாங்கங்கள் செய்து வருகின்றன. அதில் ஒரு பகுதிதான் இந்த நீட் தேர்வு.

*சரி... அப்படியானால் இன்னும் அதே பழைய கல்விக் கொள்கையைத்தான் தொங்கிக் கொண்டு இருக்க வேண்டுமா... காலத்துக்கு ஏற்றாற்போல் புதிய கல்விக் கொள்கை வேண்டாமா?*

கண்டிப்பாக மாற வேண்டும். நிறுவனங்களின் நலனுக்கானதாக இல்லாமல், நம் மாணவர்களின் நலனுக்கானதாக இருக்க வேண்டும். ஆனால், இப்போது நம் கல்விக் கொள்கையைப் பெரும் நிறுவனங்கள் வடிவமைத்துக் கொண்டிருக்கின்றன. அதன் பிரதிநிதிகளாக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமைப்பு ஆகியவை வடிவமைத்துக் கொண்டிருக்கின்றன.

மாணவர்களின் நலன் முதன்மை பெறாமல், முதலாளிகளின் நலன்தான் இந்தக் கல்விக் கொள்கையில் முதன்மையானதாக இருக்கிறது. உலக மூலதனம் இந்தியக் கல்வித் துறையின் மீது ஒரு யுத்தத்தைத் தொடுத்திருக்கிறது. அந்த மூலதனம் தேசத்துக்கு, மக்களுக்கு, இயற்கை வளங்களுக்கு என யாருக்கும் விசுவாசமாக இருக்காது. அது இலாபத்துக்கு மட்டும்தான் விசுவாசமாக இருக்கும். அந்த மூலதனத்தின் பிள்ளைதான் ‘நீட்’ தேர்வு.

*புரியவில்லை. நீட் தேர்வுக்கும் உலக வர்த்தக அமைப்புக்கும், உலக மூலதனத்துக்கும் என்ன தொடர்பு?*

உலக வர்த்தக அமைப்புக்குச் சில வாக்குறுதிகளை இந்திய அரசு அளித்துள்ளது. அதில், ஒன்று இந்தியச் சுகாதாரத் துறையை முழுவதும் தனியார் மயமாக்குவது. அதில் தங்குத் தடை இல்லாமல், அந்நிய நிதியை அனுமதிப்பது. இது நிறைவேற வேண்டுமானால், இந்தியப் பொது சுகாதாரத் துறையைச் சிதைக்க வேண்டும். அதைச் சிதைக்கத்தான் இந்த நீட் தேர்வு.

*இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல முடியுமா?*

இப்போதுள்ள மருத்துவக் கல்வி முறையில் மாணவர்கள் சில காலம் கிராமத்தில் பணியாற்ற வேண்டும். அதற்கான ஒதுக்கீடு இருக்கிறது. ஆனால், நீட் தேர்வில் அதற்கான வாய்ப்பே இல்லை. இதனால், கிராம மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அழியும். அந்த இடத்தில் தனியார் மருத்துவமனைகள் வரும். நீங்கள் நீட் தேர்வைத் தட்டையாகப் புரிந்து கொள்ளாமல் இந்தப் பின்னணியில் தான் புரிந்துகொள்ளவேண்டும். இந்த நீட் தேர்வைச் சர்வதேச அரசியல் அல்லாமல் சமூகநீதி கண்ணோட்டத்தில் பார்த்தீர்கள் என்றால், வாய்ப்பு மறுக்கப்பட்ட பின் தங்கிய சமூக மக்களை, மருத்துவத் துறையில் உள்ளே வரவிடாமல் பார்த்துக்கொள்ளும் அரசியல் தெரியும்.

*தகுதியானவர்கள் தானே மருத்துவத் துறையில் வரவேண்டும்?*

தகுதி எதை வைத்து நிர்ணயிக்கப்படுகிறது ? தாழ்த்தப்பட்ட, பழங்குடி சமூகங்களைச் சேர்ந்த ஒரு மாணவன் கடினப்பட்டு படித்து, நல்ல மதிப்பெண் பெற்று மருத்துவப் படிப்பு வாய்ப்புப்பாகக் காத்திருக்கும்போது, அவன் மீது நீட் தேர்வைத் திணிக்கிறீர்கள். கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அவனால், நீட் தேர்வுக்கானச் சிறப்பு வகுப்பில் பணம் கொடுத்து சேர முடியுமா ? ஆனால், பணம் கொடுத்து சிறப்பு வகுப்புகள் சேர முடிந்த ஒரு மாணவனையும், பணம் கொடுத்து சேர முடியாத ஒரு பழங்குடி மாணவனையும் ‘ஒன்றாக ரேசில் ஓடுங்கள்’ என்கிறீர்கள். கொஞ்சம் மூளையிலிருந்து யோசிக்காமல், மனதிலிருந்து யோசியுங்கள். உங்கள் மாநிலத்திலேயே அனைத்து மாவட்டங்களுக்கும், அனைத்து வசதிகளும் கிடைத்து விட்டதா ? நான் இங்கு பேசிக் கொண்டிருக்கும்போது... ‘விழுப்புரம், இராமநாதபுரம் மாவட்டங்கள் எல்லாம் பின்தங்கி இருக்கினறன’ என்றனர். அப்படியானால், அந்த மாவட்டங்களில் உள்ள பிள்ளைகள் எப்படிச் சென்னை மாவட்டப் பிள்ளைகளுடன் போட்டி போட முடியும் ? ஒரு மாநிலத்திலேயே இவ்வளவு சிக்கல் இருக்கும்போது, பல்வேறு தேசிய இனங்கள், மதங்கள், சாதிகள், பாகுபாடுகள் உள்ள ஒரு தேசத்துக்கு ஒற்றைத் தேர்வு சரி வருமா ?

*சரி, இதற்கு என்னதான் தீர்வு?*

கூட்டாட்சி தத்துவத்தை மதிப்பது தான் தீர்வு. தமிழகம்தான் எங்களுக்கு நீட் தேர்வு வேண்டாமென்று சட்டம் இயற்றிவிட்டது. கூட்டாட்சி தத்துவத்தின்படி, அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

கல்வியை வணிகமாகப் பார்க்காமல் இலவசமாக்க வேண்டும். அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்க வழி வகை செய்ய வேண்டும். முதலாளித்துவ தேசமான ஜெர்மனியும் சரி, கம்யூனிச தேசமான கியூபாவும்சரி, கல்வியை வணிகமாகப் பார்க்கவில்லை. ஆனால், இவ்வளவு பாகுபாடு உள்ள ஒரு தேசம் கல்வியை வணிகமாகப் பார்க்கிறது. அதிலிருந்து வருபவர்களை ஒற்றைத் தேர்வில் எடைபோடுவோம் என்கிறது.

*ஆனால், தமிழகம் மட்டும்தானே நீட் தேர்வைத் தீவிரமாக எதிர்க்கிறது?*

ஆம். அதற்கு நீங்கள் பெருமை கொள்ள வேண்டும். இது, அயோத்தி தாச பண்டிதர், பெரியார் உங்களுக்கு ஏற்படுத்திய சிந்தனை. மற்ற மாநிலங்களைவிட உங்களுக்குத்தான் எது சமூக நீதி என்று தெளிவாகத் தெரிந்திருக்கிறது. அதனால்தான், அதற்கு ஏதேனும் சிறு உராய்வு ஏற்படும்போது நீங்கள் கிளர்ந்தெழுகிறீர்கள்... போராடுகிறீர்கள். உண்மையில், தமிழ் மக்கள் நடத்தும் போராட்டங்கள் இந்தியாவின் பிற இன மக்களுக்கானதும் தான். மற்ற மாநிலங்கள் ஜல்லிக்கட்டு நடத்த முடியாமல் இருக்கும்போது நீங்கள் வெற்றிகரமாக ஒரு போராட்டத்தை நடத்தி ஜல்லிக்கட்டை நடத்தி விட்டீர்கள்.

இப்போது நீங்கள் நடத்த வேண்டியது **நீட் தேர்வுக்கு** எதிரான ஜல்லிக்கட்டு.

## தமிழ்ப்பிரியன் - ராஜநந்தினி இணையேற்பு விழா





திராவிடர் விடுதலைக் கழக ஈரோடு மாவட்டச் செயலாளர் சண்முகப் பிரியன் மகன் தமிழ்ப் பிரியன் - ராஜநந்தினி ஆகியோர் வாழ்க்கை இணையேற்பு விழா **03.09.2017** அன்று ஈரோடு அசோகபுரம் கே.கே.எஸ்.கே மகால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. வாழ்க்கை இணையேற்பு நிகழ்விற்கு, கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி தலைமை தாங்கினார். ஆசிரியர் சிவக்குமார் வரவேற்புரையாற்றினார்.

ஈ.கே.எம் நிறுவனங்களின் உரிமையாளர் “முகமது தாஜ்“, “வெங்காயம்” திரைப்பட இயக்குநர் சங்ககிரி ராச்குமார், மருத்துவர் சக்திவேல், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், விடுதலைச் சிறுத்தை கட்சியின் மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் மருத்துவர் கலைச்செல்வன், ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் செல்லப்பன், ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் நாத்திகசோதி, நாமக்கல் மாவட்டத் தலைவர் சாமிநாதன், மூத்த பெரியார் தொண்டர் அய்யா இனியன் பத்மநாபன், இந்தியப் பிரியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சண்முகப்பிரியன் நன்றி கூறினார். விழாவில் கலந்து கொண்ட தோழர்களுக்கும் உறவினர்களுக்கும் மரக்கன்று வழங்கப்பட்டது. மணவிழா மகிழ்வாக, இயக்க வளர்ச்சி நிதியாக ரூ.2000/- கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமியிடம் வழங்கப்பட்டது.

## ‘முரசொலி’ பவளவிழா கண்காட்சியில் கழக இதழ்கள்

‘முரசொலி’ நாளேட்டின் பவள விழா கண்காட்சி, சென்னை கோடம்பாக்கம் முரசொலி வளாகத்தில் அமைக்கப்பட் டுள்ளது. அதில் திராவிடர் இயக்க இதழ்கள் பட்டியலில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, ‘நிமிர்வோம்’ இதழ்கள் இடம் பெற்றுள்ளன.



Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 14th September 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN